வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவணகுமார்

தேதி 22.6.2024 நேரம் மாலை 6.10 மணி

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.6.2024/Script.

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, வங்கதேச பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா ஆகியோர் இன்று புதுடெல்லியில் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர்.

புதுடெல்லியில் இன்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதி அமைச்சர்களுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய கூட்டத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நடத்தினார்.

தேசிய தேர்வு முகமை வெளிப்படையான, சுமுகமான மற்றும் நியாயமான முறையில் தேர்வுகளை நடத்துவதை உறுதி செய்வதற்கான உயர்மட்டக் குழுவை மத்திய கல்வி அமைச்சகம், இன்று அமைத்துள்ளது.

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் இதுவரை பலியானோரின் எண்ணிக்கை 54-ஆக உயர்ந்துள்ளது.

பிரதமர்-வங்க தேசம்

இந்தியாவும் வங்காள தேசமும் இன்று பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்களைப் பரிமாறிக் கொண்டும் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் புதுப்பித்தன. இந்த ஒப்பந்தங்களில் டிஜிட்டல் மற்றும் பசுமையான கூட்டாண்மை, கடல் சார் ஒத்துழைப்பு, நீல பொருளாதாரம். சுகாதாரம், மற்றும் மருத்துவம், விண்வெளி ஒத்துழைப்பு, ரயில்வே இணைப்பு, பேரிடர் மேலாண்மை மற்றும் மீன்வளம் ஆகிய துறைகள் அடங்கும். புதுடெல்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், வங்கதேச பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவிற்கும் இடையே நடந்த இருதரப்பு பேச்சு வார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவின் அண்டை நாடுகளில் முதல் கொள்கை, விஷன்சாகர் மற்றும் இந்தோ-பசிபிக் விஷன் ஆகியவற்றின் குழுவில் வங்கதேசம் அமைந்துள்ளது என்று செய்திக் குறிப்பு ஒன்றில் பிரதமர் கூறினார். இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையே, கங்கை நதியில் உலகின் மிக நீளமான நவீன் கப்பல் பயணம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் முதல் எல்லைத் தாண்டிய நட்பு குழாய் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். முன்னதாக இன்று காலை வங்காளதேச பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவிற்கு குடியரசு தலைவர் மாளிகையில் வரவேற்பு

அளிக்கப்பட்டது.பின்னர் ராஜ்காட்டில் அமைந்துள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் அவர் அஞ்சலி செலுத்தினார். 2 நாள் பயணமாக புதுடெல்லி வந்த வங்கதேச பிரதமர் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு மற்றும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் ஆகியோரையும் சந்திக்க உள்ளார்.

*பட்ஜெட்*

பட்ஜெட்டிற்கு முந்தைய கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இதனை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதி அமைச்சர்களுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நடத்தினார். மத்திய நிதி துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, நிதி துறை செயலர் திரு டி. வி சோமநாதன், பொருளாதார விவகாரங்கள் துறை செயலர் மற்றும் மூத்த அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். நேற்று விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பொருளாதார நிபுணர்களுடன் திருமதி நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை நடத்தினார். மேலும் நிதி மற்றும் மூலதன சந்தை துறைகளின் முன்னணி நிபுணர்கள், தொழில் துறை தலைவர்கள் மற்றும் சங்கங்கள் மற்றும் முன்னணி பொருளாதார வல்லுனர்களுடன் இதேபோன்ற சந்திப்புகளை அவர் நடத்தினார். இன்று நடைபெற்ற கூட்டத்தில் கோவா. மேகாலயா,

மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் பீகார், மத்தியபிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய மாநிலங்களின் துணை முதல்வர்கள், மாநில நிதி அமைச்சர்கள் மற்றும் பிற அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

*அமித் ஷா*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இன்று புதுடெல்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் விரைவு குடியேற்ற பயண திட்டமான fasttrack immigration- trusted travelar programme-ஐ தொடக்கி வைத்தார். இந்த திட்டம் இந்திய குடிமக்கள் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக வடிவமைக்கப்பட்ட அரசாங்கத்தின் முன் முயற்சியாகும். இந்த வசதியைப் பெற தகுதி பெற்ற நபர்கள் ஆன்-லைன் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தேவையான பிற தகவல்களுடன் தங்கள் அடையாளங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அதற்குறிய செயலாக்க கட்டணத்தை செலுத்தி இந்த வசதியை பெறலாம்.

*ஜிஎஸ்டி*

53-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் இன்று பிற்பகல் புதுடெல்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெற்றது. மத்தியில் புதிய அரசு அமைந்த பிறகு முதன் முறையாக நடைபெறும் இந்த கூட்டத்திற்கு மத்திய

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமை வகிக்கிறார். கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் தகுதி மற்றும் வயது தொடர்பாக முன்மொழியப் பட்ட ஜிஎஸ்டி மேல்முறையீட்டு தொடர்பான நிபந்தனைகளில் திருத்தங்களைப் பரிந்துரைத்தது. கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை விரைவாக வழங்கவும் மாட்டுத் தீவன உற்பத்தி செலவை குறைக்கவும், வெல்லப்பாகு மீதான ஜிஎஸ்டி-யை குறைப்பதற்கும், தினை மாவிற்கான உணவுப் பொருட்களை தயாரிப்பதற்கு வரிவிலக்கையும், இந்த கவுன்சில் பரிந்துரைத்தது.

*மக்களவை கூட்டத் தொடர்*

18-ஆவது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்குகிறது. இந்த அமர்வின் போது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதி மொழி ஏற்பு நிகழ்வு நடைபெற உள்ளது. தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள பாஜக மூத்த எம்பி திரு பர்த்ரு ஹரி மஹ்தாப் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். புதிய சபாநாயகருக்கான தேர்தல் இம்மாதம் 26-ஆம் தேதி நடைபெறும். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, வரும் 27-ஆம் தேதி லோக்சபா மற்றும் ராஜ்ய சபா கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுவார். ராஜ்யசபா

கூட்டத் தொடர் வரும் 27-ஆம் தேதி துவங்குகிறது. மேலும் நாடாளுமன்ற கூட்டத் தொடர் அடுத்த மாதம் 3-ஆம் தேதி நிறைவடைகிறது.

*மும்பை-திரைப்பட விழா*

மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் 18-ஆவது படைப்பு நேற்று இரவு தேசிய மற்றும் சர்வதேச திரைப்படத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களின் பெரும் கொண்டாட்டத்துடன் நிறைவடைந்தது. 61 மொழிகளில் 59 நாடுகளில் இருந்து 314 படங்களின் மாறுபட்ட வரிசையுடன் திரையிடப்பட்டன. சிறந்த அறிமுக இயக்குநருக்கான தாதா சாகேப் பால்கே சித்ராநகரி விருதை ஸ்ரீமோயி சிங் and towards happy alleys படத்திற்காக பெற்றார். சிறந்த சிறுகதைக்கான விருதை சால்ட் பெற்றது. இந்த சர்வதேச திரைப்பட விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் மகாராஷ்டிர மாநிலத்தின் கலாச்சார விவகார அமைச்சர் திரு சுதிர்முங்கந்தி வார் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

*பிரதமர்-லட்சுமிகாந்தா*

காசி விஸ்வநாதர் கோவில் அர்ப்பணிப்பு மற்றும் ராமர்கோவில் பிரதிஷ்டையில் ஒரு பகுதியாக இருந்த ஆச்சாரிய லட்சுமி காந்த் தீக்ஷித் மறைவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். காசியின் அறிவார்ந்த பாரம்பரியத்தில் பிரபலமான மனிதர் ஆச்சாரியா என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து பிரதமர்

வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் நாட்டின் சிறந்த அறிஞரும் சங்வேதப் பள்ளியின் யஜுர்வேத ஆசிரியருமான லட்சுமி காந்த் தீக்ஷித்தின் மறைவு தம்மை சோகத்தில் ஆழ்த்தியது என்றும் அவரது மறைவு சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் பதிவிட்டுள்ளார்.

நெட்-தேர்வு

இம்மாதம் நடைபெற இருந்த csir-ugc-net தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 25 முதல் 27-ஆம் தேதி வரை தேர்வு நடத்த தேசிய தேர்வு முகமை முன்னதாக திட்டமிட்டிருந்தது. இத்தேர்வுக்கான திருத்தப்பட்ட அட்டவணை அதிகாரப் பூர்வ இணைய தளம் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

NTA-குழு

தேசிய தேர்வு முகமை வெளிப்படையான, சுமுகமான மற்றும் நியாயமான முறையில் தேர்வுகளை நடத்துவதை உறுதி செய்வதற்கான உயர்மட்டக் குழுவை மத்திய கல்வி அமைச்சகம், இன்று அமைத்துள்ளது. முன்னாள் இஸ்ரோ தலைவர் திரு கே ராதாகிருஷ்ணன் தலைமையிலான 7 பேர் கொண்ட குழு தேசிய தேர்வு முகமையின் தேர்வு செயல்பாட்டில் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், விதிமீறல்களை தடுப்பதற்கும் தரவு பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கும் முகமையின்

கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்கும் சீர்திருத்தங்களை பரிந்துரைக்கிறது. இந்தக் குழு தனது அறிக்கையை கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவில் முன்னாள் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ரன்தீப் குலேரியா, ஐதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் திரு பிஜே ராவ், ஐஐடி மெட்ராஸ் பேராசிரியர் திரு கே ராமமூர்த்தி மற்றும் ஐஐடி டெல்லியின் மாணவர் விவகாரங்களின் டீன் பேராசிரியர் திரு ஆதித்யா ஆகியோர் அடங்குவர்.

*ஒடிசா*

ஒடிசாவில் பூரிஜெகந்நாதர் ஆலயத்தில் நீராடும் யாத்திரை இன்று தொடங்கியது. சடங்கிற்கு முன்னதாக கோவில் வளாகத்தில் அமைந்துள்ள தங்க கிணறு என்று அழைக்கப்படும் புனித கிணற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீரை அர்ச்சகர்கள் புனிதப் படுத்தினர். இறைவன் நீராடலில் மொத்தம் 108 குடங்களில் நறுமன மற்றும் மூலிகை நீர் பயன்படுத்தப்பட்டது. பூரி ஜெகந்நாதர் மீது 35 குடம் நீரும் பாலபத்ரா மீது 33 குடம் நீரும், தேவி சுபத்திரை மீது 22 குடம் நீரும், சுதர்சன பகவான் மீது 18 குடம் நீரும் ஊற்றி நீராட்டினர்.

கள்ளக்குறிச்சி

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் இதுவரை பலியானோரின் எண்ணிக்கை 54-ஆக உயர்ந்துள்ளது.கள்ளச்சாராயம் காய்ச்சுவதில் ஈடுபடுவோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகிகளுக்கு தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது. இதுகுறித்து சட்டப்பேரவையில் உடனடியாக விவாதம் நடத்தக் கோரி அதிமுக உறுப்பினர்கள் இன்று அவையில் இருந்து வெளிநடப்ப செய்தனர். இந்த விவகாரத்தில் அரசியல் ஆதாயம் தேட எதிர்கட்சிகள் முயற்சிப்பதாக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு குற்றம் சாட்டினார். இதன் எதிரொலியாக சாராயக் கடத்தலை தடுப்பதற்கு புதுவை- தமிழக எல்லைப் பகுதிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்று காவல்துறைக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.

யோகா தினம்

பஹ்ரைனில் உள்ள இந்திய தூதரகம் நேற்று 10-ஆவது சர்வதேச யோகா தினத்தை சுய மற்றும் சமூகத்திற்கான யோகா என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடியது. கலிபா விளையாட்டு மைதானத்தில் நூற்றுக் கணக்கான ஆர்வலர்கள் ஒன்று கூடி யோகா செய்தனர். பஹ்ரைனின் பொது விளையாட்டு ஆணையத்துடன் இணைந்து இந்திய தூதரகம் இந்த ஏற்பாடுகளை செய்திருந்தது. இந்த

ஆண்டு மார்ச் முதல் வாரம் தோறும் யோகா வகுப்புகளையும் நம் வாழ்வை மேம்படுத்தும் யோகாவின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் தூதரகம் நடத்தி வருகின்றது.

வில்வித்தை

இந்தியாவின் ஜோதி சுரேகா வென்னம், பர்னீத் கவுர் மற்றும் அதிதி சுவாமி ஆகியோர் துருக்கியேவில் நடைபெற்ற அன்டல்யா வில்வித்தை உலக கோப்பை 2024 கூட்டுக் குழுப் போட்டியில் தங்கம் வென்றுள்ளனர். இன்று பிற்பகல் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தி மகளிர் அணி 232-229 என்ற புள்ளிக் கணக்கில் எஸ்தோனியா-வை தோற்கடித்தது. இதன் மூலம் இந்திய அணி இந்த பருவத்திற்கான அனைத்து உலக கோப்பை போட்டிகளிலும் வென்று 3 தங்கப் பதக்கங்களையும் வென்றுள்ளது.

கிரிக்கெட்

ஐசிசி 20-ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் சூப்பர்-8 சுற்றில் இந்திய அணி தனது 2-ஆவது ஆட்டத்தில் இன்று இரவு 8 மணிக்கு வங்க தேச அணியுடன் மோதுகிறது. இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றால் அரை இறுதி சுற்றுக்கு தகுதி பெறும்.

வானிலை

அடுத்த 4 நாட்களுக்கு கேரளா, கர்நாடகா ஆந்திரா, தெலங்கானா தமிழ்நாடு, மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளில் இடி,

மின்னலுடன் கூடிய கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, வங்கதேச பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா ஆகியோர் இன்று புதுடெல்லியில் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர்.

புதுடெல்லியில் இன்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதி அமைச்சர்களுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய கூட்டத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நடத்தினார்.

தேசிய தேர்வு முகமை வெளிப்படையான, சுமுகமான மற்றும் நியாயமான முறையில் தேர்வுகளை நடத்துவதை உறுதி செய்வதற்கான உயர்மட்டக் குழுவை மத்திய கல்வி அமைச்சகம், இன்று அமைத்துள்ளது.

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் இதுவரை பலியானோரின் எண்ணிக்கை 54-ஆக உயர்ந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------